மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) நீர்த் தேக்கங்களில் போதுமான நீர் இல்லாமையால் மனுதாரரின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, 1971-72, 1972-73-ஆம் வருஷங்களில் இக் கால்வாய் மூலம் மொத்தம் எத்தனை ஏக்கர்கள் சாகுபடி செய்யப்பட்டன ? அதற்கு எந்த அடிப்படையில் தீர்வை வசூலிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தீர்வை எந்த அளவிற்கு வசூலிக்கப்படுகிறது என்பதைப் பற்றித் தகவல் இல்லை. இது, தண்ணீர் விடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்களா என்ற கேள்வி. அதற்கு மட்டும் தகவல் இருக்கிறது. வேறு விவரம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போடவேண்டும்.

வேடந்தாங்கல் ஏரியை மேம்படுத்தல்.

*வினா 281 : திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் வட்டம், வேடந்தாங்கலில் உள்ள மரங்கள் பட்டுப் போவதைத் தடுக்கும் வகையில் அங்குள்ள ஏரியை மாற்றி அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம். வேடந்தாங்கல் ஏரியிலுள்ள மரங்கள் பட்டுப்போகாமல் இருக்க பல பள்ளங்கள் வெட்டும் திட்டம் ஒன்று ரூ. 29,500-க்கு தல அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது.

Boeing Air-Service to Madurai.

***282 *Q*.—THIRU N. DENNIS :** Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the State Government have been consulted by the Union Government on the opening of Boeing Air Service to Madurai ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the steps taken to get this introduced at an early date ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ), (இ), & (உ) இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தார் மேற்கொண்டு ஒரு போயிங் விமானத்தை வாங்கி 1974-ம் ஆண்டு கடைசியிலோ அல்லது 1975-ம் ஆண்டின் ஆரம்பத்திலோ ஒரு போயிங் 737 விமானத்தை மதுரைக்கு விட உத்தேசித்திருப்பதாக இந்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது.